## சென்னை ஓபன் டபிள்யு.டி.ஏ.– 250 சர்வதேச பெண்கள் டென்னிஸ் சாம்பியன்ஷிப்

# 2025 அக்டோபர் 27-ஆம் தேதி தொடங்கி, நவம்பர் 2-ஆம் தேதி வரை நடைபெறும்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜூலை 19 -**

**சென்னையில், வருகிற அக்டோபர் 27-ஆம் தேதி தொடங்கி, நவம்பர் 2-ஆம் தேதி வரை, சென்னை ஓபன் டபிள்யு.டி.ஏ.- 250 சர்வதேச பெண்கள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் 2025 போட்டி நடைபெறும் என, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவித்தார்.**

**இதுதொடர்பாக சென்னையில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்ட அறிவிப்பின் விவரம் வருமாறு:**

2025-ஆம் ஆண்டுக்கான சென்னை ஓபன்- சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன்ஷிப் குறித்த அறிவிப்பை வெளியிடுவதில் நம் தமிழ்நாடு அரசு பெருமிதம் கொள்கிறது. மூன்று ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு, டபிள்யு.டி.ஏ (WTA) சென்னை ஓபன் வருகிற அக்டோபர் 27-ஆம் தேதி முதல் நவம்பர் 2-ஆம் தேதி வரை, சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள புகழ்பெற்ற எஸ்.டி.ஏ.டி (SDAT) டென்னிஸ் மைதானத்தில் நடைபெற உள்ளது.

### முதன்மை அரங்கு

இந்த மைதானத்தின் முதன்மை அரங்கு நமது சரித்திர நாயகர் விஜய் அமிர்தராஜின் பெயரில் அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. மேம்படுத்தப்பட்ட இந்த மைதானத்துக்கு வர இருக்கும் உலகின் முன்னணி வீராங்கனைகளை வரவேற்க, ஆவலுடன் நாம் காத்திருக்கிறோம். மேலும், முத்தாய்ப்பாக இந்த ஆண்டில், தமிழ்நாடு டென்னிஸ் சங்கம் (TNTA) தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இந்த வேளையில், இந்தப் போட்டி தமிழ்நாட்டில் நடப்பது மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும்.

இந்தத் தொடரை நடத்துவதற்காக, 12 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, தொடர்ந்து ஆதரவளித்து வரும் மாண்புமிகு முதலமைச்சருக்கு நமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று, தமிழ்நாடு இந்தியாவின் முன்னணி விளையாட்டு மாநிலமாக உருவெடுத்து, தொடர்ந்து பல்வேறு தேசிய, சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகிறது. நமது திராவிட மாடல் அரசு, சர்வதேச விளையாட்டு நிகழ்வுகளை ஊக்குவிப்பதிலும், இந்திய விளையாட்டு வீரர்களின் திறமைகளை வளர்த்தெடுப்பதிலும், எப்போதும் உறுதியுடன் இருந்து வருகிறது.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் "சென்னை ஓபன் சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன்ஷிப் 2025" போட்டி அறிவிப்பு குறித்த செய்தியாளர் சந்திப்பு நிகழ்ச்சி, சென்னையில் நேற்று முன்தினம் (17.7.2025) நடைபெற்றது. இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி. தமிழ்நாடு டென்னிஸ் சங்கத்தின் தலைவர் விஜய் அமிர்தராஜ், தமிழ்நாடு டென்னிஸ் சங்கத்தின் செயலாளர் பி.வெங்கடசுப்ரமணியம், பொருளாளர் டோட்லா விவேக் குமார் ரெட்டி, போட்டியின் இயக்குநர் ஹித்தன் ஜோஷி உள்பட அரசு அலுவலர்கள் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

### திராவிட மாடல் அரசு

சென்னையில் நடைபெறவுள்ள ஏ.டி.பி (ATP) சேலஞ்சர் டூர் போட்டிக்கு ஒரு கோடி ரூபாயை நமது திராவிட மாடல் அரசு ஒதுக்கியுள்ளது. 2025-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் விளையாட்டுக்கு மிகச் சிறப்பான ஆண்டாக அமைய உள்ளது. ஏற்கனவே ஜூனியர் ஹாக்கி உலகக் கோப்பை விளையாட்டுப் போட்டி மற்றும் ஆசிய அலைச்சறுக்கு சாம்பியன்ஷிப் போட்டி -2025 ஆகியவற்றை அறிவித்துள்ளோம். தற்போது, சென்னை ஓபன் டபிள்யு.டி.ஏ. (WTA)-வின் பிரமாண்டமான மறுவரவை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். இது ஒரு தொடக்கமே - மேலும் பல அற்புதமான சர்வதேச நிகழ்வுகள் வர இருக்கின்றன. இவை வரவிருக்கும் ஆண்டை உற்சாகமானதாக மாற்றும். ஆக்டகன் (OCTAGON) மற்றும் டபிள்யு.டி.ஏ. (WTA) சென்னையின் மீதும் இந்தியாவின் மீதும் வைத்திருக்கும் ஆழ்ந்த நம்பிக்கைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

விளையாட்டை ஊக்குவிப்பதிலும், வீரர்-வீராங்கனைகளின் சாதனைகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, பொதுமக்களின் பங்கேற்பை ஊக்கப்படுத்துவதிலும் ஊடகங்களின் பங்கு மிக முக்கியமானது. உங்களின் இந்த ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

### வீராங்கனைகளின் திறமை

2025 - சாம்பியன்ஷிப் மிகப் பிரமாண்டமாகவும் சிறப்பாகவும் இருக்கும். உலகின் முதல் 100 தரவரிசை வீராங்கனைகள் இதில் பங்கேற்க உள்ளனர். இந்தத் தொடர், ரசிகர்களை ஈர்ப்பதுடன், நம் நாட்டு வீராங்கனைகளின் திறமைகளை மேம்படுத்தி, தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் இளம் வீராங்கனைகளுக்கு உத்வேகமாகவும் இருக்கும்.

தமிழ்நாடு அரசு சார்பாக, வீராங்கனைகள், ரசிகர்கள், ஸ்பான்ஸர்கள் மற்றும் டென்னிஸ் சமூகத்திற்கும் மறக்க முடியாத அனுபவத்தை வழங்குவதற்காக, ஒவ்வொரு வேலையும், துல்லியமாகத் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படும் என உறுதியளிக்கிறோம். உங்கள் ஒவ்வொருவரையும் இந்த விழாவில் பங்கேற்க அழைக்கிறோம்.

இந்த சர்வதேச நிகழ்விற்குப் பரவலாக கவனத்தைக் கொண்டுவர ஊடகங்கள் தங்களின் சிறப்பான பங்களிப்பைத் தர வேண்டுமென எதிர்பார்க்கிறோம். நாம் ஒன்றிணைந்து, டபிள்யு.டி.ஏ. (WTA) 250-ஐ ஒரு அற்புதமான வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றிகரமான நிகழ்வாக்குவோம். சர்வதேச விளையாட்டு நிகழ்வுகளுக்கான உலகத்தரம் வாய்ந்த இடமாக, தமிழ்நாட்டைத் தொடர்ந்து திகழச் செய்வோம்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலர் அதுல்ய மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர்-செயலர் ஜே.மேகநாத ரெட்டி ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு டென்னிஸ் அசோசியேஷனின் தலைவர் விஜய் அமிர்தராஜ் மற்றும் மதிப்புறு இயக்குநர் வெங்கட சுப்பிரமணியம், ஆகியோருடன் அதிகாரிகள் மற்றும் விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர்.

---



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.7.2025), 37.00 கோடி ரூபாய் மொத்த பரிசுத் தொகை கொண்ட 2025 ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளுக்கு இணையதளம் மூலமான முன்பதிவினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி உள்பட அரசு அலுவலர்கள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.




நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு 16.07.2025 அன்று திருச்சிராப்பள்ளி பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தை பயணிகள் பயன்படுத்தும் வகையில் அனைத்து பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதை தொடர்ந்து நகர் மற்றும் புறநகர் பேருந்துகள் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்து பேருந்து முனையத்தின் செயல்பாடுகளை பார்வையிட்டார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித் தலைவர் வே.சரவணன், மாநகர காவல் ஆணையர் திருமதி.காமினி, மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி.தீபிசானு, துறையூர் சட்டமன்ற உறுப்பினர் செ.ஸ்டாலின் குமார், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் கும்பகோணம் கோட்டத்தின் நிர்வாக இயக்குநர் க.தசரதன், மண்டல பொதுமேலாளர்கள் சிங்காரவேலன், சதீஷ்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ர.ராஜலட்சுமி, மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள், போக்குவரத்துத்துறை அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

## 37 கோடி ரூபாய் மொத்த பரிசுத் தொகை கொண்ட – 2025ஆம் ஆண்டு

# "முதலமைச்சர் கோப்பை" விளையாட்டுப் போட்டிகளுக்கான முன்பதிவு!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஜூலை 19 -**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.7.2025), 37 கோடி ரூபாய் மொத்த பரிசுத் தொகை கொண்ட 2025 ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளுக்கு இணையதளம் மூலமான முன்பதிவினைத் தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை இந்தியாவின் விளை யாட்டுத் தலைநகரமாக உருவாக்கி வருகின்றார்கள். தமிழ்நாட்டில் உள்ள பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள் மற்றும் அரசு பணியாளர்கள் பங்கேற்கும் வகையில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளை நடத்தி வருகின்றார்கள்.

கடந்த 2024 ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளுக்கு 83.37 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சிறப்பாக நடத்தப்பட்டன. இந்த ஆண்டு (2025) முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் 2025 (Chief Minister's Trophy Games 2025) அனைத்து மாவட்ட மற்றும் மண்டல அளவில் வருகின்ற 22.8.2025 முதல் 12.9.2025 வரை நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள் மற்றும் அரசு பணியாளர்கள் என ஐந்து பிரிவுகளில் ஆண், பெண் இருபாலரும் பங்கேற்கும் வகையில், மாவட்ட அளவில் 25 வகையான விளையாட்டுப் போட்டிகளும், மண்டல அளவில் 7 வகையான விளையாட்டுப் போட்டிகளும், மாநில அளவில் 37 வகையான விளையாட்டுப் போட்டிகளும் என மொத்தம் 83.37 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படவுள்ளன.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் விளையாட்டு வீரர்கள் அனைவரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இணையதளமான https://cmtrophy.sdat.in / https://sdat.tn.gov.in வாயிலாக 17.7.2025 முதல் முன்பதிவு செய்து தனிநபர் மற்றும் குழு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளலாம். முன்பதிவு செய்திட கடைசி நாள் 16.8.2025 மாலை 6.00 மணி ஆகும்.

தனி நபர் போட்டிகளில் மாநில அளவில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக 1.00 இலட்சம் ரூபாயும், இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாயும், மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும். குழு போட்டிகளில் மாநில அளவில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக தலா 75 ஆயிரம் ரூபாயும், இரண்டாம் பரிசாக தலா 50 ஆயிரம் ரூபாயும், மூன்றாம் பரிசாக தலா 25 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும். இப்போட்டிகளில் வழங்கப்படும் சான்றுகள் மூலம் சிறப்பு மதிப்பெண்கள் மற்றும் சலுகைகள் பெற இயலும்.

தமிழ்நாடு முழுவதிலும் இருந்து 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் 19 வயதிற்குட்பட்ட பள்ளி மாணவர்களுக்கும், 25 வயதிற்குட்பட்ட கல்லூரி மாணவர்களுக்கும், 15 வயது முதல் 35 வரை பொதுப் பிரிவினருக்கும், அனைத்து வயது மாற்றுத்திறனாளிகளுக்கும், தமிழ்நாடு அரசு மற்றும் அரசு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்கள், தமிழ்நாட்டில் பணிபுரியும் ஒன்றிய அரசு பணியாளர்கள் ஆகியோருக்கும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளது.

எனவே விளையாட்டில் ஆர்வம் உள்ள அனைவரும் தவறாமல் https://cmtrophy.sdat.in / https://sdat.tn.gov.in என்ற இணையதளம் மூலம் முன்பதிவு செய்து விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது. தாங்களாகவோ, தங்கள் பள்ளி, கல்லூரி மூலமாகவோ முன்பதிவு செய்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாவட்ட அலுவலகங்களை தொடர்பு கொள்ளலாம். ஆடுகளம் தகவல் தொடர்பு மையத்தை அனைத்து வேலை நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை 9514 000 777 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி உள்பட அரசு அலுவலர்கள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.